# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 60/பேரூ/2025**
**நாள் : 29.05.2025**

திரு. ராம. லெட்சுமணன்,
நெற்குப்பை,
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நெற்குப்பை பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை, கதவு எண்.1, ப.ராம.லெ. தெரு, லெ.ராம.லெ. இல்லம், என்ற முகவரியை சேர்ந்த திரு. ராம. லெட்சுமணன் என்பவரது 28.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2025 அன்று பெறப்பட்டு, 60/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை , கதவு எண்.1, ப.ராம.லெ. தெரு, லெ.ராம.லெ. இல்லம், என்ற முகவரியை சேர்ந்த திரு. ராம. லெட்சுமணன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 28.01.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

1. “சிவகங்கை மாவட்டம், திருப்பத்துார் வட்டம், நெற்குப்பை வார்டு எண்.6ல் எங்கள் வீடுகள் அமைந்துள்ள ப.ராம.லெ. தெருவின் இரு முனைகளிலும் தெருவிளக்குகள் இல்லாமல் பொதுமக்கள் அல்லலுற்று வருகிறார்கள். அதன் பொருட்டு நெற்குப்பை பேரூராட்சியில் வேண்டுகோள் விடுத்தும் பலன் இல்லாமல் இருந்து வந்தது.

2. பலமுறை வேண்டுகோள் விடுத்ததற்குப் பின்னர் எழுத்து மூலமாகக் கொடுக்கலாம் என்று 22.04.2022 அன்று மின்னஞ்சல் மூலம் செயல் அலுவலருக்கு கோரிக்கை மனு அனுப்பியிருந்தோம்.

3. இதற்கு அவர்களிடமிருந்து எவ்விதப் பதிலும் வராததால் 19.05.2022 அன்று மறுபடியும் மின்னஞ்சல் மூலம் கோரிக்கை மனு அனுப்பியிருந்தோம்.

4. எந்த நடவடிக்கையும் இல்லாததால் 05.07.2022 அன்று மீண்டும் கோரிக்கை மனுவை மின்னஞ்சல் மூலம் அனுப்பியிருந்தோம். இதற்கு, மின்வயர்கள் இழுத்து பின்னர்தான் விளக்குகள் பொருத்த முடியும் என்றும் வயர்கள் இழுப்பதற்காக மின்சார வாரியத்தை அணுகுவதாகவும் 05.07.2022 தேதியிட்ட கடிதம் மூலம் பதில் அனுப்பியிருந்தார்கள்.

5. பின்னர் பல மாதங்கள் ஆகியும் எவ்விதச் செய்கையும் இல்லாததால் 28.12.2022 அன்று ஞாபகமூட்டும் வண்ணம் மீண்டும் மின்னஞ்சல் அனுப்பினோம்.

6. அதற்கும் பதில் இல்லாததால் 01.03.2023 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005ன் கீழ் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் கேட்டு, மனு அனுப்பியிருந்தோம். மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால அவகாசமான 30 நாட்களுக்குள் செயல் அலுவலர் / பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து எவ்விதத் தகவலும் வரவில்லை.

7. ஆகையால் 13.04.2023 அன்று உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) / மேல்முறையீட்டு அலுவலர், சிவகங்கை அவர்களுக்கு மேல்முறையீட்டு மனு, மின்னஞ்சல் மூலம் - அனைத்து இணைப்புகளுடன் அனுப்பியிருந்தோம். அதற்கும் இன்று வரையில் எவ்விதப் பதிலும் வரவில்லை.

8. எங்களது 01.03.2023 ஆம் தேதியிட்ட RTI மனுவிற்கு நெற்குப்பை பேரூராட்சி செயல் அலுவலர் / பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து 17.06.2023 அன்று ஒரு கடிதம் பதிவுத் தபாலில் வரப் பெற்றது. இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் இக்கடிதத்தில் எந்த விபரமும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

9. மேற்குறிப்பிடப்பட்டுள்ளவைகளின் அடிப்படையில், இதன் மூலம் தெருவிளக்குகள் பொருத்துவதற்குத் தேவையான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இப்படியே தொடர்ந்தால் எங்கள் தெருவிற்கு எக்காலத்திலும் தெருவிளக்குகள் பொருத்தப்படப்போவதில்லை என்பதை வேதனையுடன் அறிய முடிகிறது.

<u>வேண்டுகோள்:</u>

1. ஆகவே இவ்விஷயத்தில் தாங்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்து எங்கள் தெருவிற்கு, இனியும் தாமதம் இல்லாமல் தெருவிளக்குகள் பொருத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறோம்.

2. பொதுமக்களின் வரிப் பணத்தில் சம்பளம் பெற்றுக்கொண்டு, பொறுப்பும் கடமையுணர்வுமின்றி, சட்டவிதிகளுக்கு உட்பட்டுச் செயல்படாமல்

   மெத்தனப் போக்குடன் இருந்து வரும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுகிறோம்.

   இதற்கு முறைமன்ற நடுவம் மூலம் நல்ல தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் தங்களுடைய மேலான நடவடிக்கையை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளோம்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நெற்குப்பை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. நெற்குப்பை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. கு. பசலிக்கா ஜான்சி என்பவர் தனது 07.04.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.123/2024–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

மனுதாரரின் புகார் மனுவை ஆய்வு செய்ததில், தெருவிளக்கு கோரப்பட்ட ப.ராம.லெ. தெருவில் (80 மீட்டர் நீளமும், 4-5 மீட்டர் அகலமும் கொண்ட தெருவாகும்) மின்கம்பங்கள் இல்லாத நிலையில் உள்ளது. இந்நிலையில் புதிதாக மின்கம்பங்கள் அமைத்து பொருத்துவதற்கு அரசின் எந்தவொரு நிதி ஒதுக்கீடும் இதுவரை இப்பேரூராட்சிக்கு வரப்பெற்றதில்லை. மேலும், பேரூராட்சியின் பொதுநிதியிலிருந்து பணியை மேற்கொள்வதாக இருப்பின், சென்னை, பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி பின்வரும் நிபந்தனைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1 | பேரூராட்சியின் பொது நிதி இருப்பு |
| 2 | 2024-2025 ஆம் ஆண்டு வரவு செலவு அறிக்கையில் மேற்காண் பணிக்கான நிதி ஒதுக்கீடு |
| 3 | பணியாளர்களுக்கான 3 மாத ஊதிய இருப்பு உள்ளதற்கான சான்று |
| 4 | பணி தேவை என்பதற்கு செயற் பொறியாளரின் சான்று |
| 5 | மன்றத் தீர்மானம் |
| 6 | மின் கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் கடன்கள் நிலுவை இல்லை என்பதற்கான சான்று |

மேற்சொன்ன 6 நிபந்தனைகளுக்குரிய விவரங்களுடன் முழு வடிவிலான கருத்துருவினை, சென்னை, பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின், உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆகவே, எதிர்வரும் மன்றக் கூட்டத்தில் தீர்மானம் பெறப்பட்டு மேற்சொன்ன நிபந்தனைகள் பூர்த்தியாகப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், மனுதாரர் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் அப்பகுதியில் சோலார் மின்விளக்கு பொருத்துவதற்கு நெற்குப்பை பேரூராட்சி மூலம் மன்ற அனுமதி பெறப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான நெற்குப்பை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 19.05.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 08.05.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. ராம. லெட்சுமணன் என்பவர் 19.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- “சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6ல் அமைந்துள்ள ப. ராம. லெ. தெருவின் இருமுனைகளிலும் தெருவிளக்குகள் இல்லாமல் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். தெருவிளக்குகள் அமைக்கக் கோரி நெற்குப்பை பேரூராட்சியில் 2022 ஆம் ஆண்டு முதல் கோரிக்கை மனு அளித்தும் கடந்த 3 ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

- எனவே பொதுமக்களின் நலன் கருதி ப. ராம. லெ. தெருவின் இருமுனைகளிலும் தெருவிளக்குகள் அமைக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான நெற்குப்பை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. கு. பசலிக்கா ஜான்சி என்பவர் 19.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை பேரூராட்சிக்குட்பட்ட தெருவிளக்கு அமைக்க கோரப்பட்டுள்ள ப. ராம. லெ. தெருவானது 80 மீட்டர் நீளமும் 4-5 மீட்டர் அகலமும் கொண்ட மின்கம்பங்கள் இல்லாத தெருவாகும். இத்தெருவில் மின்கம்பம் அமைக்க அரசின் எந்தவொரு நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

- பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து மின்கம்பம் அமைக்க பொது நிதியில் நிதியிருப்பு இருந்து, கடன்கள் நிலுவையில் இல்லை என்கிற

நிபந்தனைகளுடன் பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றி பேரூராட்சிகளின் ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும்.

- மனுதாரரின் கோரிக்கையான ப. ராம. லெ. தெருவில் மின் விளக்குகள் அமைப்பது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள 23.04.2025 அன்று பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 25.04.2025 அன்று சிவகங்கை மாவட்டம் ஆ.தெக்கூர் மின்சார வாரியத்திற்கு மதிப்பீட்டு அறிக்கையினை அளிக்கக் கோரி கடிதம் எழுதப்பட்டுள்ளது. இவ்வறிக்கை பெற்றவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் திரு. ராம. லெட்சுமணன் என்பவரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான நெற்குப்பை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. ராம. லெட்சுமணன் என்பவர் தனது 28.01.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில், நெற்குப்பை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6ல் அமைந்துள்ள ப.ராம.லெ. தெருவில் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் மின்விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக இருப்பதாக தெரிவித்து, இத்தெருவின் இருமுனைகளிலும் மின்விளக்குகள் அமைக்கக் கோரி கடந்த 3 ஆண்டுகள் காலமாக நெற்குப்பை பேரூராட்சியில் பல்வேறு மனுக்கள் சமர்ப்பித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் ப.ராம.லெ. தெருவில் தெருமின்விளக்குகள் அமைக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் தெருவிளக்குகள் அமைக்கக் கோரும் ப.ராம.லெ. தெருவானது 80 மீட்டர் நீளமும், 4-5 மீட்டர் அகலமும் கொண்ட மின்கம்பங்கள் இல்லாத தெரு எனவும், இத்தெருவில் மின்விளக்குகள் அமைக்க அரசின் எவ்வித நிதி ஒதுக்கீடும் பெறப்படவில்லை என்பதும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் வாயிலாக தெரிய வருகிறது.

இருப்பினும், பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் ப.ராம.லெ. தெருவில் மின்கம்பங்கள் பொருத்தி தெரு விளக்கு அமைக்கும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள நெற்குப்பை பேரூராட்சி மன்றத்தில் 23.04.2025 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு (தீர்மான எண். 162/2025) உள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

இதனைத்தொடர்ந்து நெற்குப்பை பேரூராட்சி, பா.ராம.லெ தெருவில் மின்கம்பம் ஊன்றி தெருவிளக்கு அமைப்பதற்கான இடத்தினை கள ஆய்வு செய்து மதிப்பீடு அறிக்கை வழங்குமாறு சிவகங்கை மாவட்டம், ஆ.தெக்கூர் மின்சார வாரியத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலரின் 25.04.2025 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளதை செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் ஆவணத்தின் மூலமும் தெரிய வருகிறது.

இந்நிலையில் நெற்குப்பை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்தவாறு ப.ராம.லெ. தெருவில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி, அத்தெருவில் மின்விளக்குகள் அமைப்பதற்கான நடவடிக்கையினை மின்சார வாரியத்தின் அறிக்கையின் அடிப்படையிலும், சட்ட விதிகளுக்குட்பட்டும் பேரூராட்சியின் நிதிநிலையினை கருத்திற் கொண்டும் துரிதமாக மேற்கொள்ளுமாறு நெற்குப்பை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு மே 29-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ராம. லெட்சுமணன்,
லெ.ராம.லெ. இல்லம்,
எண்.1, ப.ராம.லெ. தெரு,
நெற்குப்பை – 630 405.
சிவகங்கை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
நெற்குப்பை பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம்

3) பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

30/5/25
செயலாளர்
30/5/25